


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.7.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டில், தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் பாத்ஃபைண்டர் நிகழ்ச்சிகளின் மூலம் உள்வளர்ச்சி பெற்ற 5 ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு, ஐடிஎன்டி மையத்தின் ஃபவுண்டேஷன் நிதியின் கீழ் விதை நிதியாக மொத்தம் 53.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், ஐடிஎன்டி மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி வனிதா வேணுகோபால், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (NRDC) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (ஓய்வு) கமாண்டர் அமித்ரஸ்தோகி, ஜெட்வெர்க்கின் எலக்ட்ரானிக்ஸ் தலைவர் ஜோஷ் ஃபோல்கர், ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்காவின் குழு தலைமைச் செயல் அலுவலர் நடராஜன் மல்லுப்பிள்ளை, அஸ்ட்ராஜெனெகா இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர் சிவகுமார் பத்மநாபன் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (30.7.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டில், தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தில் உள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற வசதி மையத்தின் (டிஎன்டிஎஃப்சி) சார்பில் கல்வி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இடையே நான்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், ஐடிஎன்டி மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி வனிதா வேணுகோபால், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (NRDC) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (ஓய்வு) கமாண்டர் அமித்ரஸ்தோகி, ஜெட்வெர்க்கின் எலக்ட்ரானிக்ஸ் தலைவர் ஜோஷ் ஃபோல்கர், ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்காவின் குழு தலைமைச் செயல் அலுவலர் நடராஜன் மல்லுப்பிள்ளை, அஸ்ட்ராஜெனெகா இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர் சிவகுமார் பத்மநாபன் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவர்கள் உடனிருந்தனர்.

## இந்திய மென்பொருள் சேவைத் தலைநகரமாக சென்னையை

# வடிவமைக்க, 'திராவிட மாடல்' அரசு உறுதிபூண்டுள்ளது!

### சென்னை தமிழ்நாடு புத்தாக்க மாநாடு - 2025 -ல்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஆக.1-**

**சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், 2025 -ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு புத்தாக்க மாநாட்டை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து, வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``தமிழ்நாட்டைப் புத்தாக்கத் தலைநகராக வடிவமைப்பதில் தமிழ்நாடு அரசு தனது கொள்கை, உள்கட்டமைப்பு, முதலீடுகள் மற்றும் தலைமையேற்பு ஆகியவற்றின் மூலம் உறுதிபூண்டுள்ளது'' எனக் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:**

அனைவருக்கும் என் காலை வணக்கம்! தமிழ்நாடு புத்தாக்க மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து, மிகவும் மகிழ்கிறேன். நமது திராவிட இயக்கம் எப்போதுமே புதிய தொழில்நுட்பத்தை ஊக்குவித்து வந்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதெல்லாம், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் புதிய தொழில்நுட்பங்கள் சென்றடைவதை இலக்காகக்கொண்டு பணியாற்றியுள்ளது.

#### கலைஞர் இட்ட அடித்தளம்

முத்தமிழறிஞர் கலைஞரின் தொலைநோக்குத் தலைமைதான் தமிழ்நாடு டிஜிட்டல் யுகத்தில் பீடுநடை போடுவதற்கு அடித்தளமிட்டது. நாட்டிலேயே முதல்முறையாக மாநிலத்திற்கென்று பிரத்யேகமான தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிமுகப்படுத்திய முதலமைச்சர் அவர்தான். பள்ளிகளில் கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தியும், டைடல் பூங்காக்களை நிறுவியும், லட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் கொண்டுவந்தவர். மேலும், கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை எண்ணற்ற மாணவர்களையும், தொழில்நுட்ப நிபுணர்களையும் வளர்த்தெடுத்து, இன்று நாம் காணும் டிஜிட்டல் முன்னேற்றத்தை வடிவமைத்து வருகிறது.

கலைஞரின் வழித்தடத்தைப் பின்பற்றி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக நிலைநிறுத்தியுள்ளார். அவரது தலைமையின் கீழ் நமது திராவிட மாடல் அரசு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையில் புதிய உச்சங்களைத் தொட்டு, பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் இத்துறையில் நமது அரசின் முக்கிய சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதில், மகிழ்ச்சி அடைகிறேன்.



#### மென்பொருள் சேவை

நமது திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகளால், இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில், தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. சென்னை, 'இந்திய மென்பொருள் சேவைத் தலைநகரம் 'சாஸ்' (SaaS)' என அழைக்கப்படுகிறது. முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களின் கிளைகளை, கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட இரண்டாம் நிலை நகரங்களில் தொடங்கியுள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறையின் பங்கேற்புடன், திறன் இடைவெளிகளைக் களைந்து, 'நான் முதல்வன் திட்டம்' உள்ளிட்ட முன்னெடுப்புகள் மூலமாக, நமது அரசு மாணவர்களை தொழில்துறைக்கு தயார் செய்து வருகிறது.

டிஜிட்டல் தளங்களை, அனைத்துத் தரப்பினரும் அணுக ஏதுவாக, சென்னை, தாம்பரம், ஆவடி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் சுமார் 2,000 கட்டணமில்லா வை-ஃபை இணைப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்துறை சார்ந்த திட்டங்களை மேலும் வலுப்படுத்தும் விதமாக, 2023-ஆம் ஆண்டு மே மாதம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐ-டி.என்.டி. மையத்தைத் (iTNT Hub) தொடங்கிவைத்தார். அதன் விளைவாக, மாநில அளவிலான புத்தாக்க மாடலை உருவாக்கி, கட்டமைப்பதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது. இப்படிப்பட்ட சாதனைப் பயணத்தின் முக்கிய கட்டத்தில் இம்மாநாடு நடைபெறுகிறது.

இம்மாநாட்டின் கருப்பொருளாக 'அறிவாற்றலின் கேந்திரம்: தமிழ்நாட்டை இந்தியாவின் புத்தாக்க தலைநகரமாக மாற்றுதல்' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையைப் பாராட்டுகிறேன். இத்துறையில், தமிழ்நாட்டின் இலக்கை இம்மாநாடு பிரதிபலிப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, இந்த மாநாடு நமது புத்தாக்கப் பயணத்தில் ஒரு மைல்கல்லாக அமையும். அறிவுசார் சொத்துகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், அவற்றைப் பாதுகாத்து, விரிவுபடுத்தி, வணிகமயமாக்குவதையும் இம்மாநாட்டு நோக்கமாக அமைத்துள்ளது.

#### டிஜிட்டல் சேவைகள்

இந்த மாநாடு ஆராய்ச்சியாளர்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், தொழில்துறையினர் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு அறிவுசார் சொத்து குறித்த விழிப்புணர்வை மேம்படுத்த உதவும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

#### அறிவுசார் சொத்து

படைப்பாக்க ரீதியாக மட்டுமின்றி, பொருளாதார ரீதியாகவும் அறிவுசார் சொத்தை ஒரு வளமாகக் கருதக்கூடிய பண்பாட்டை வளர்த்தெடுக்க, இது உதவும். தமிழ்நாட்டின் அறிவுசார் சொத்து அடிப்படையிலான புத்தாக்க முயற்சிகளை ஆதரிக்கும் தளமாகவும் இது விளங்கும். த்தைப் பெறலாம். குறிப்பாக, தமிழ்நாடு அரசுடன் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் மற்றும் முக்கிய கல்வி நிலையங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட இருக்கின்றன.

இந்தக் கூட்டுமுயற்சிகள் வலுவான உலகளாவிய தொடர்புகளை உருவாக்கி, படைப்பூக்கம், நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்களுக்கு வழிவகுக்கும் துடிப்பான சூழலை உருவாக்கும். தமிழ்நாட்டில் டீப்-டெக் தொழில்நுட்பம் மற்றும் எமெர்ஜிங்-டெக் தொழில்நுட்ப ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை ஊக்குவிக்க, உருவாக்கப்பட்ட ஃபவுண்டேஷன் ஃப்ண்ட் FOUNDATION FUND-இல் இருந்து முதல் நிதி வழங்கலை அறிவிப்பதில் பெருமை அடைகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை செலவாக இல்லாமல், தமிழ்நாட்டின் எதிர்காலத்துக்கான ஒரு முதலீடாகப் பார்க்கிறார். iTNT மையம் தேசிய மற்றும் உலகளாவிய பங்குதாரர்களின் ஆதரவுடன், இந்த முன்னெடுப்புகளைத் தலைமையேற்று வழிநடத்துவதுடன், பல்கலைக்கழகங்களிலிருந்து தொழில்துறைக்குப் புதிய தொழில்நுட்பங்கள் பரிமாறப்படுவதை உறுதி செய்யும்.

#### செயலாக்க உத்திகள்

இந்த மாநாடு உலகத்தரமான நடைமுறைகளுடன் நமது செயலாக்க உத்திகள் ஒத்துப்போவதுடன், தொழில்துறையில் உலகளாவிய போட்டிக்கு நாம் தயாராவதையும் உறுதி செய்யும். இது தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப பயணத்தின் வரலாற்றில் நினைவுகூரப்படும். நமது மாணவர்கள் புதிய அறிவுசார் சொத்துகளை உருவாக்குவதிலும், அவற்றை பாதுகாப்பதிலும் முனைப்புடன் ஈடுபடுவார்கள் என்று நம்புகிறேன். நமது ஆராய்ச்சியாளர்கள் கட்டுரைகளை வெளியிடுவதையும் தாண்டி, புதிய தயாரிப்புகளையும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களையும் உருவாக்குவது பற்றி சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அறிவுசார் சொத்தையே உங்கள் தனித்துவ அடையாளமாக வரித்துக் கொண்டு, அதை உரிமையாக்கி, அதனுடன் உங்கள் நிறுவனங்களும் வளரவேண்டும் என நமது ஸ்டார்ட்-அப் நிறுவனங்களைக் கேட்டுக்கொள்கிறேன். முதலீட்டாளர்களே, தமிழ்நாட்டில் முதலீட்டிற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. பல ஆய்வறிக்கைகள் தொழில் செய்வதற்கு உகந்த மாநிலங்களின் பட்டியலில், தமிழ்நாட்டை முதலிடத்தில் வைத்துள்ளன.

தமிழ்நாட்டின் புத்தாக்கப் பயணத்தின் தொடக்கத்திலேயே முதலீடு செய்து, எங்களுடன் சேர்ந்து வளர்ச்சிப்பாதையில் பயணிக்க, உங்களை அன்புடன் அழைக்கின்றேன். தமிழ்நாட்டைப் புத்தாக்கத் தலைநகராக வடிவமைப்பதில் தமிழ்நாடு அரசு தனது கொள்கை, உள்கட்டமைப்பு, முதலீடுகள் மற்றும் தலைமையேற்பு ஆகியவற்றின் மூலம் உறுதிபூண்டுள்ளது. தமிழ்நாட்டிற்கென தனித்த புத்தாக்கச் சூழலை உருவாக்கி, ஒன்றாக இணைந்து முன்னேறுவோம். இந்த மாநாடு மிகப்பெரிய வெற்றி பெற எனது வாழ்த்துகள்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

#### பங்கேற்றவர்கள்

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மாநில திட்டக்குழு துணைத்தலைவர் ஜெயரஞ்சன், தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் கமோடோர். அமித் ரஸ்தோகி ஆகியோருடன் அரசு உயரதிகாரிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

---

### இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, தருமபுரி கிழக்கு, நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் மேற்கொண்டார்!















இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று முன்தினம், சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, தருமபுரி கிழக்கு, நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களில் சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டுஅவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழகப் பணி சிறக்க வாழ்த்தினார்.